மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கள்ளக்குறிச்சி பை-பாஸ் பற்றிய கேள்வி. வினா எண். 75. திரு. எஸ். ஆசைமணி. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

75—

குடவாசல் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகையைப் பழுதுபார்த்தல்

*1550. திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், குடவாசல் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகையை பழுதுபார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றிகூறி, இந்த ஆய்வு மாளிகை மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கிறது. இந்தப் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகைக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற குடவாசல் பொதுப் பணித்துறை ஆய்வு மாளிகை 1930-லே கட்டப்பட்டது. பல ஆண்டுகளாக அந்த மாளிகை சீரமைக்கப்படாமல் மிகவும் மோசமான நிலையிலே இருந்து வந்தது. நம்முடைய இதய தெய்வம் ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அவர்கள், ஆட்சியிலே இந்த குறைபாடுகள் நம்முடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நேரத்திலே உடனடியாக இந்த அரசு 35 ஆயிரம் ரூபாயை ஒதுக்கி 5—9—1991-ஆம் நாளன்று ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு இன்றைக்கு வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மிகவும் சீர்கேடான நிலையில் இருப்பதாலும், பல ஆண்டுகளாக பணி துவக்கப்படாமல் மாசமான நிலையில் இருப்பதாலும், இந்தப் பணம்

போதாது என்ற நிலையில் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற நிலையில் 'வேண்டுகோளை வைத்து அவ்வாறு செய்யப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு மாளிகை என்று வருகின்ற போது அடிப்படை வசதிகளை முதலிலே செய்து கொடுப்பதற்கு இந்த அரசு முன்வந்து இருக்கிறது. ஆகவே இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற பணத்திலே முறையாக தங்குவதற்கு அந்த மாளிகையில் வசதிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இப்போது ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை அளவிலேயே நல்ல முறையிலே அந்த பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை சீரமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 76. திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

76—

சத்துணவுக் கூடங்கள் நன்கொடை மூலம் கட்டுதல்

*3325 திரு. சி. ஞானசேகரன் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்துணவுக் கூடங்களை தொழில் அதிபர்களின் நன்கொடை மூலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதற்கான மதிப்பீடு எவ்வளவு?

(இ) இதனால் அரசுக்கு மிச்சப்படுகிற நிதி எவ்வளவு?

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) & (ஆ) & (இ) சமூக நலத்துறையினுடைய மானியக் கோரிக்கை விவாதத்தின் போது இதற்கு விளக்கமான பதிலை மாவட்ட வாரியாக தெரிவிக்கப்பட்டுவிட்டதால், இப்போது இந்த பதில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்குத் தேவைப்படாது என்று கருதுகிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சத்துணவுக் கூடங்கள் ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தின்படியும் கட்டப்படுகின்றன. அதேபோல தொழில் அதிபர்களுடைய நன்கொடையாலும் கட்டப்படுகின்றன.